# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.27.11.25

DW4- திரு.கோவிந்தசாமி த/பெ. திரு.பரமசிவம்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம் மற்றும் கான்ரக்ட். அதுதவிர வேறு தொழில் உள்ளதா என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் ஆமாம். எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 10, 15 ஆண்டுகளாக பழக்கம். 3ஆம் பிரதிவாதி ஐயப்பன் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபரா என்றால் ஆமாம். என்னுடைய பிறந்தநாள் விழாவிற்காக ஐயப்பனால் ஒட்டபட்ட சுவரோட்டி என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.7** ஆகும்.அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர்கள் என்பதால்தான் சுவரோட்டி ஒட்டியிருக்கிறார் என்றால் நெருக்கமில்லை. வா..சா.ஆ.1 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பே 1 முதல் 4 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணம் என் பெயரில் ஏற்படுவதற்கு முன்போ பின்போ வாதி தண்டபாணிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட தேதியில்தான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு காசோலை வழங்கபட்டதாக ஆவணத்தில் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவின்போது 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பணம் என் கணக்கிலிருந்து போகவில்லை என்றால் ஞாபகமில்லை. பத்திரம் பதிவின்போது என்னுடைய காசோலைகள் நான்கும் பணமாக்கப்படவில்லை என்றால் தெரியாது. என்னுடைய வங்கி கணக்கை பார்த்தால் எப்போது அந்த காசோலைகள் பணமாக்கபட்டது என்று தெரியும் என்றால் ஆமாம். அவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யஇயலுமா என்றால் முடியும். ரூ. 22,53,000/- தான் இடத்திற்கான மதிப்பா என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் அந்த மதிப்பு நிர்ணயம் செய்யபட்டது என்றால் பேசி முடித்தவிலை அதுதான். பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு வாதி தண்டபாணியை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம் போனில் பேசினோம். அவ்வாறு போனில் பேசக்கூடிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை பிரச்சனை வரும் என்று தெரியாது நான் எதுவும் பதிவு செய்து வைக்கவில்லை. நான் வாதி தண்டபாணியை எந்தவகையிலும் தொடர்பு

கொள்ளவில்லை என்றும் தற்போதுதான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரைய பத்திரத்திற்கு வாசகம் யார் சொன்னது என்றால் ரைட்டர் வைத்துதான் எழுதினோம். கிரைய பத்திரம் ஏற்படும் தேதியில் வாதிக்கு தொகை பற்றாகிவிட்டதாக வாசகம் உள்ளது என்றால் ஆமாம். அந்த வாசகம் தவறு என்றால் பவர் ஏஜென்ட் எழுத்துகாரரிடம் சொல்லியிருப்பார் அதனால் எழுத்துகாரர் எழுதியிருப்பார். அது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். யார் சொன்னது என்றால் நாலுபேரும் சொன்னார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல்வருக்கு தொகை பற்றாகிவிட்டது என்று எழுதியுள்ளது தவறு என்றால் சரியல்ல. சொத்தை என் பெயரில் பதிவு செய்யும் போது சொத்திற்கான உரிமையாளர் வாதி தண்டபாணிதான் என்றால் இல்லை தண்டபாணி விற்றுவிட்டதாக சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டபோது தாவா சொத்தின் உரிமையாளர் வாதி தண்டபாணிதான் என்றால் சரியல்ல. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் நீங்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை கிரையம் பெற்றவரல்ல என்றால் சரியல்ல. என்னிடமிருந்தோ 1 முதல் 4பிரதிவாதிகளிடமிருந்தோ வாதிக்கு எந்தவித மறுபயன் கிரையத்தொகை கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மற்றும் 1 முதல் 4பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து வாதி தண்டபாணியை ஏமாற்றும் நோக்கில் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

2ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- பா.நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.